பதிப்புரிமை ஆசிரியருக்கே / All Rights to Author

# GEOGRAPHY EXAMINATION

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) அலகுப் பரீட்சை - புறவிசைகள்
General Cerificate of Education (Adv. Level) Unit Examination - External Forces

புதிய பாடத்திட்டம்
*New Syllabus*

புவியியல் I,II
Geography I,II

22 T I,II

## புறவிசைகள்

*இரண்டு முப்பது மணித்தியாலம்*
*Two thirty hours*

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

சுட்டெண்: ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு **சரியான** விடைக்கும் **இரண்டு** புள்ளி வீதம் வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி I மொத்தப் புள்ளிகள்

பகுதி II மொத்தப் புள்ளிகள்

இறுதிப் புள்ளிகள் 100


## பகுதி / Part - I

- **1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை அதன் அருகிலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**1.** ஆற்றின் முதுமைப் பருவத்தில் அவதானிக்க **முடியுமான** நிலவுருவம்
(1) ஆற்றுவரம்பு
(2) பாறைக் குழிவு
(3) விரைவோட்டாற்றுப் பகுதி
(4) ஆற்று மியாந்தர்
(5) விசிறி வடிகால் (.....)

**2.** **'கிண்ணி ஏரி'** எனப்படுவது
(1) பாலைவனப் பிரதேசத்தில் நீரினால் உருவாக்கப்படும் நிலவுரும்.
(2) கண்டப் பனிக்கட்டியாற்றரிப்பின் தின்னல் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் நிலவுருவம்.
(3) ஆற்றின் முதிர்ச்சிப் பருவத்தில் அவதானிக்கத்தக்க நிலவுருவம்.
(4) மலைப் பனிக்கட்டியாற்றரிப்பின் படிதல் செயற்பாட்டால் தோற்றுவிக்கப்படும் நிலவுருவம்.
(5) தரைக்கீழ்க் குகையில் நீர் தேங்கிக் காணப்படும் பள்ளநிலப் பகுதி. (.....)


**3.** அருகிலுள்ள படத்தின் மூலம் இனங்காட்டப்படும் புறம்பிறந்த விசையினால் உருவாக்கப்பட்ட **நிலவுரும்**



(1) உடுக்குன்று
(2) பார்க்கன் மணற்குன்று
(3) தொம்போலா
(4) கூழாங்கன்னாக்கு
(5) கியூக்கான்ஸ் (.....)

**4.** பின்வருவனவற்றுள் சுண்ணக்கற் பிரதேசங்களுக்குரிய நிலவுருவங்களை **மாத்திரம்** கொண்டமைந்த விடை
(1) பொனார், விழுங்குதுளை, உவாலஸ், லாப்பீஸ்
(2) விழுங்குதுளை, உவாலஸ், யார்டாங்கு, ஓங்கல்
(3) தரைக்கீழ்க் குகை, உவாலஸ், பீடைக்கிடைத்திணிவு, பொனார்
(4) கசிந்துளி வீழ்வு, தூண்கள், கூர்நுனி உச்சி, தொங்கு பள்ளத்தாக்கு
(5) கசிந்துளிப் படிவு, விழுங்குதுளை, உவாலஸ், ஓங்கல் (.....)

**5.** அருகிலுள்ள படத்தில் ஆங்கில எழுத்து **A** இனால் காட்டப்படும் **நிலவுருவம்**
(1) உயரணை
(2) டெல்டா
(3) வெள்ளச் சமவெளி
(4) ஆற்று மியாந்தர்
(5) ஆற்றுப்பக்க அணை (…..)




**6.** **'வட்டக்குகை'**களை உருவாக்கும் புறவிசைக்கருவி
(1) தரைக்கீழ் நீர்
(2) காற்று
(3) கடலலை
(4) பனியாறு
(5) ஓடும் நீர் (…..)


**7.** ஆறு கொண்டு செல்லும் சுமைகளில் **'பிரிக்கப்பட்ட சுமை'** என்பது
(1) நீர்த்தாக்கத்தால் உடைந்த பாறைத் துண்டுகள்.
(2) நீரின் இரசாயனச் செயன்முறை மூலமாக எடுக்கப்பட்ட பருப்பொருட்கள்.
(3) நீர் எற்றிச் செல்லும் சுமை.
(4) நீர்ப் பாதையின் அடித்தளத்தில் நகர்த்தப்படும் சுமை.
(5) நீர் படியவிடும் சுமை. (…..)

**8.** **'அலம்பலலை'** என்பது
(1) படிதலை மேற்கொள்ளும் அலை.
(2) கரையோரத்துடன் மோதித் திரும்பும் அலை.
(3) கரையோரத்துடன் தின்னலை மேற்கொள்ளும் அலை.
(4) சுனாமி அலை.
(5) சாதாரண அலை. (…..)

**9.** பின்வருவனவற்றுள் திணிவசைவின் வகையாகக் **கொள்ள முடியாதது**
(1) மண் ஊர்தல்
(2) மண் வழிதல்
(3) நிலவழுக்குகை
(4) படியவிடல்
(5) சேறு வழிதல் (…..)

**10.** பல்வேறு வகைப்பட்ட நிலவுருவங்களும் பல்வேறுபட்ட செயன்முறைகளும் கீழே தரப்பட்டுள்ளன.
**(A)** பெருங்கற்குழம்பு
**(B)** பாலைவனப் பாறைத் திட்டை
**(C)** தொங்கு பள்ளத்தாக்கு
**(D)** பனிக்கட்டிச் செயன்முறை
**(E)** எரிமலைச் செயன்முறை
**(F)** காற்றுச் செயன்முறை
கீழே தரப்பட்டுள்ள விடைகளில் நிலவுருவத்தையும், அதனோடு தொடர்புபட்ட செயன்முறையையும் எது **சரியாகக்** குறித்துக் காட்டுகின்றது?
(1) **AD, BE, CF**
(2) **AF, CD, BE**
(3) **AB, CD, FE**
(4) **AE, BF, CD**
(5) **CD, AF, BD** (…..)

**11.** அருகில் படத்தில் காட்டப்பட்டுள்ள புறம்பிறந்த விசையால் தோற்றுவிக்கப்படும் நிலவுருவத்தின் பெயர்
(1) ஆற்றுப்பக்க அணை
(2) குத்துப்பாறை வாற்குன்று
(3) றோஜ்முற்றோனிக்
(4) தொங்கு பள்ளத்தாக்கு
(5) நீள்குன்று (…..)




**12.** பிரான்சின் **சீன் கழிமுகம்** ஒரு,
(1) விசிறி வடிவக் கழிமுகம் ஆகும்.
(2) பறவைக்கால் வடிவக் கழிமுகம் ஆகும்.
(3) பொங்குமுகக் கழிமுகம் ஆகும்.
(4) பல்வடிவக் கழிமுகம் ஆகும்.
(5) கொழுக்கி வடிவக் கழிமுகம் ஆகும். (…..)

**13.** எகிப்திலுள்ள **'குவாடாராப் பள்ளம்'** உருவானதுடன் தொடர்புறும் புறவிசைச் செயன்முறையாக **அமைவது**
(1) அரைந்து தேய்தல்
(2) தேய்த்தல்
(3) படியவிடல்
(4) வாரியிறக்கல்
(5) ஊரல் (…..)

A.Kajan

**14.** பின்வருவனவற்றுள் பனியாற்றரிப்பைத் தீர்மானிக்கும் காரணியாகக் **கொள்ளமுடியாதது**
(1) பனிக்கட்டிக் கவிப்பின் உறைநிலைத் தன்மையும் உருகுநிலைத் தன்மையும்.
(2) பனியாற்றுக்கும் தரைக்கும் இடையில் காணப்படும் நீரின் செறிவு.
(3) பனியாறு நகரும் பிரதேசத்தின் சமதரைத் தன்மை.
(4) பனியாறு பாய்ந்து செல்லும் பிரதேசப் பாறையின் வன்மை மற்றும் மென்மைத் தன்மை.
(5) பனியாறு நகர்த்திச் செல்லும் பாறையின் வன்மை மற்றும் மென்மை. **(…..)**

**15.** அருகில் படத்தில் காட்டப்பட்டுள்ள நிலவுருவத்தின் உருவாக்கத்திற்குக் காரணமான **புறவிசைக் கருவி**




(1) தரைக்கீழ் நீர்
(2) காற்று
(3) கடலலை
(4) பனியாறு
(5) ஓடும் நீர்
**(…..)**

**16. 'கிளேசியர்'** - என்பது
(1) கடல் நீரினுடைய மேல் கீழான அசைவு.
(2) பாறைத் துகள்களின் கட்புலனாகாத மெதுவான அசைவு.
(3) விசாலமான பனிப்படலம்.
(4) காற்றினால் காவிச் செல்லப்படும் காற்றரிபரல்.
(5) தரைக்கீழ் குகையையும் விழுங்கு துளையையும் இணைக்கும் வாயில். **(…..)**


**17.** மழைப் பருவங்களில் தரைநீர் ஒன்றுசேர்ந்து புவி மேற்பரப்பில் ஆறு மற்றும் குளங்களுடன் இணைந்து நீர் பயணிக்கும் செயன்முறை
(1) பெருக்கெடுத்தல்
(2) வழிந்தோடல்
(3) லொயேஸ்
(4) கலங்கற் பாய்ச்சல்
(5) தரைக்கீழ் அருவி
**(…..)**

**18.** சுண்ணாம்புக் கற்களின் விசேட இயல்பொன்றாகக் **கொள்ளவியலாதது**
(1) சேதன, இரசாயன, பௌதிக முறையால் உருவான அடையற் பாறைகளாக விளங்குதல்.
(2) கரைசல் செயன்முறையால் அரிக்கப்படக்கூடிய பாறையாக விளங்குதல்.
(3) பல்மூலத் தாய்ப் பாறையின் மீது கவிந்து காணப்படுதல்.
(4) மூட்டுக்கள், பிளவுகள் மற்றும் நுண்துகள்களைக் கொண்டிருத்தல்.
(5) கல்சியம் காபனேற்றைப் பிரதான கனிப்பொருளாகக் கொண்டிருத்தல். **(…..)**

**19.** கீழே தரப்பட்டுள்ள வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள துண்டித்த சுவடுகள், தொங்கு பள்ளத்தாக்குகள், நீர் வீழ்ச்சிகள் ஆகியவற்றின் அமைவிடத்தை பின்வரும் எக் கூற்று சரியாக விளக்குகின்றது?
(1) தொங்கு பள்ளத்தாக்கு, துண்டித்த சுவடுகள், நீர்வீழ்ச்சி
(2) துண்டித்த சுவடுகள், தொங்கு பள்ளத்தாக்கு, நீர்வீழ்ச்சி
(3) நீர்வீழ்ச்சி, தொங்கு பள்ளத்தாக்கு, துண்டித்த சுவடுகள்
(4) நீர்வீழ்ச்சி, துண்டித்த சுவடுகள், தொங்கு பள்ளத்தாக்கு
(5) தொங்கு பள்ளத்தாககு, நீர்வீழ்ச்சி, துண்டித்த சுவடுகள் **(…..)**




**20.** அருகில் படத்தில் காட்டப்பட்டுள்ள புறவிசைச் செயன்முறை



(1) மண்சரிவு
(2) பாறை வீழ்வு
(3) மண் ஊர்தல்
(4) நிலவழுக்குகை
(5) சேறு வழிதல்
**(…..)**

A.Kajan - A.Kajan

## பகுதி / Part - II

✹ **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக**

**1. (i)** ‘**இமவாக்கம்**’ என்பதை வரையறை செய்க. (02 புள்ளிகள்)

**(ii)** பனியாற்றரிப்பு இடம்பெறும் **மூன்று** முறைகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

**(iii)** மலை இமவாக்கப் பிரதேசங்களில் அரித்தல் **மற்றும்** படிதல் செயன்முறைகளால் தோற்றுவிக்கப்படும் **இவ்விரு** நிலவுருவங்களைப் புனையா வரைபடத்தின் துணை கொண்டு ஆராய்க. (08 புள்ளிகள்)

**2. (i)** கடற்கரையொன்றின் **பிரதான** பிரிவுகளைக் காட்டுவதற்கு குறுக்கு வெட்டுமுகம் ஒன்றை வரைந்து, அவற்றுள் ஒவ்வொரு பிரிவுகளையும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

**(ii)** கடலலையின் **தின்னற்** செயன்முறைகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

**(iii)** அலைகளின் தொழிற்பாட்டினால் உருவாகின்ற **நான்கு** படிதல் நிலவுருவங்களின் உருவாக்கச் செயன்முறைகளைப் புனையா வரைபடத்தின் துணைகொண்டு ஆராய்க. (08 புள்ளிகள்)

**3. (i)** காற்றின் தின்னற் செயல்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

**(ii)** காற்றின் **தின்னற்** செயலால் உருவாகும், **நான்கு** நிலவுருவங்களையும், படிதல் செயலால் உருவாகும் **நான்கு** நிலவுருவங்களையும் அடையாளம் செய்க. (04 புள்ளிகள்)

**(iii)** மேலே, **வினா (ii)** இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்ட நிலவுருவங்களில் வகைக்கு தலா **இரண்டு** வீதம், அவற்றின் உருவாக்கச் செயன்முறையை விளக்கப் பட உதவியுடன் ஆராய்க. (08 புள்ளிகள்)

**4. (i)** உலகில் **காஸ்ற்** நிலவுருவங்களை அவதானிக்கவல்ல **ஆறு** இடங்களை அடையாளம் செய்க. (03 புள்ளிகள்)

**(ii)** காஸ்ற் பிரதேசமொன்றில் அவதானிக்கத்தக்க **நான்கு** நிலவுருவங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றின் உருவாக்கச் செயன்முறையை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**(iii)** காஸ்ற் பிரதேசத்தின் பொருளாதார முக்கியத்துவத்தினை எவையேனும் **நான்கு** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

**5. (i)** ‘**திணிவசைவு**’ என்பதை வரையறை செய்க. (03 புள்ளிகள்)

**(ii)** திணிவசைவைத் தீர்மானிக்கும் **மூன்று** காரணிகளை முன்வைத்து, அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

**(iii)** திணிவசைவின் **பிரதான** வகைகளைக் குறிப்பிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)